செங்கல்பட்டு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,

பிறப்பிப்பவர் - திருமதி. சொ. கற்பகம். எம்.எஸ்.சி., எம்.ஏ., எம்.ஏ., பி.எட்., எம்.பில்.,

ப.மு.எண். 10444/அ1/2024, நாள். 02.12.2024.

-----

பொருள் : பள்ளிக் கல்வித் துறை - தமிழ்நாடு அமைச்சுப் பணி - இளநிலை உதவியாளர் நேரடி நியமனம் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழு 24.07.2022 அன்று நடைபெற்ற தொகுதி IV தேர்வு - தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நியமன ஆணை வழங்கப்பட்டமை - செங்கல்பட்டு மாவட்டம், அஞ்சூர், அரசு மேல்நிலைப் பள்ளி - இளநிலை உதவியாளர் - திரு. மா. சரவணக்குமார் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 04.10.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்ந்து.

பார்வை :

1. அரசாணை(நிலை) எண். 151 பள்ளிக் கல்வி (ப.க.1(1))த் துறை, நாள் 09.09.2022
2. சென்னை-03, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுச் செயலாளரின் கடிதம் எண்.1975/PSD-C2/2023 நாள். 25.08.2023.
3. சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண். 56703/அ4/இ1/2023 நாள் 21.09.2023
4. செங்கல்பட்டு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், ந.க.எண். 6400/அ1/2023, நாள். 27.09.2023.
5. அஞ்சூர், அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் கடிதம் ந.க.எண். 90 / 2024 நாள் 14.11.2024

-------

செங்கல்பட்டு மாவட்டம், அஞ்சூர், அரசு மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு. மா. சரவணக்குமார் என்பார் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு தொகுதி IVல் 24.07.2022 அன்று நடைபெற்ற தேர்வு மூலம் பார்வை (2)ன்படி இளநிலை உதவியாளராக தேர்வு செய்யப்பட்டு பார்வை-4ல் காணும் செயல்முறைகளின்படி அஞ்சூர், அரசு மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டு 04.10.2023 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார்.

மேற்காண் பணியாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழு மூலம் தேர்வு செய்யப்பட்டதாலும், கல்விச் சான்றுகளின் உண்மைத் தன்மை அறியப்பட்டுள்ளதாலும், பார்வை 5-ல் காணும் கடிதத்தின்படி மேற்காண் பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கக் கோரி கருத்துரு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பார்வை (1)ல் காணும் அரசாணை (நிலை) எண். 151 பள்ளிக் கல்வி (ப.க.1(1))த் துறை நாள் 09.09.2022-ன்படி முதன்மைக் கல்வி அலுவலருக்கு நியமன அலுவலராக வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, கீழ்க்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் தனியர் திரு.மா.சரவணக்குமார் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 04.10.2023 முற்பகல் முதல் பணியினை வரன்முறைப்படுத்தப்படுகிறது.

1. சார்ந்த பணியாளர் மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டிற்குள் தகுதிகாண் பருவத்தை முடிக்கவேண்டும்.

Scanned with OKEN Scanner

2. தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினையும், துறைத் தேர்வான தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் (தேர்வுக் குறியீட்டு எண். 172) தேர்விலும் கண்டிப்பாகத் தேர்ச்சி பெற வேண்டும். மேலும் தனியருடைய தகுதிகாண் பருவம் அதிகப்படியாக 5 ஆண்டுகள் வரை மட்டுமே நீட்டிக்கப்படும்.

3. சார்ந்த பணியாளர் துறைத் தேர்வில் இக்காலத்திற்குள் தேர்ச்சி பெறத் தவறினாலும், பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் தேர்ச்சி பெறுவதில் (நிருவாகக் காரணம் தவிர்த்து) தனியரால் காலதாமதம் ஆகும் நேர்வுகளில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 33(4)ன்படி தனியர் அரசுப் பணியிலிருந்து நீக்கம் செய்யப்படுவார்.

| வ. எண். | தேர்வாணைய பட்டியல் வரிசை எண். | பெயர் / பதவி / பணிபுரியும் பள்ளி | இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | 558 | திரு. மா. சரவணக்குமார்<br>இளநிலை உதவியாளர்<br>அரசு மேல்நிலைப் பள்ளி,<br>அஞ்சூர்<br>செங்கல்பட்டு மாவட்டம் | 04.10.2023<br>முற்பகல் | 04.10.2023<br>முற்பகல் |

மேற்காண் பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தினை அன்னாரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தொடர்புடைய பள்ளித் தலைமையாசிரியருக்குத் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு - அசல் பணிப்பதிவேடு

02/12/24

முதன்மைக் கல்வி அலுவலர்,
செங்கல்பட்டு

மா.த
02/12/2024

பெறுநர்
சம்பந்தப்பட்ட பணியாளர் (உரிய வழியாக)

படி

1) தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2) மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), செங்கல்பட்டு
3) தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, அஞ்சூர்

Scanned with OKEN Scanner